# தி.மு.க. மகளிர் அணி

# ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!

கழகத் **தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **மதுரை மாநகர் மாவட்டத்திற்குட்பட்ட** தி.மு.க. மகளிர் அணியின் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### மதுரை மாநகர் மாவட்டம்

**திருப்பரங்குன்றம் வடக்கு ஒன்றியம்**

அமைப்பாளர் - ஏ. ஜெகதீஸ்வரி சின்னகண்மாய் தெரு, கோவில்பாப்பாக்குடி, மதுரை - 625018.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. பசுபதி கிழக்கு தெரு, தாராப்பட்டி, கொடிமங்கலம், மதுரை - 625034. 2) பி. சாந்தி 1/258, கிழக்கு தெரு, துவரிமான், மதுரை - 625019. 3) எம். கலா 3/366, சுசி காலனி, சிக்கந்தர் சாவடி, மதுரை - 625018. 4) பி. விசாலாட்சி 3/217, மந்தையன் தெரு, சிக்கந்தர்சாவடி, மதுரை - 625018.

**பரவை பேரூர்**

அமைப்பாளர் - கே. நாகேஸ்வரி 8/7/16, பரவை மீனாட்சி மில் காலனி, பரவை, மதுரை மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ச. சாந்தி 22/ஆர், பரவை மீனாட்சி மில் காலனி, மதுரை மாவட்டம். 2) ரா. சுப்பு விவேகானந்தர் தெரு, பரவை, மதுரை - 625402. 3) ரா. ரெங்கம்மாள் கம்பன் தெரு, பரவை, மதுரை - 625402. 4) பெ. சரோஜா காந்திஜி தெரு, பரவை, மதுரை மாவட்டம். 5) த. கவிதா முனியாண்டி கோவில் தெரு, சத்தியமூர்த்தி நகர், பரவை, மதுரை - 625402.

**சோலையழகுபுரம் பகுதி**

அமைப்பாளர் - எஸ். பழனியம்மாள் 34, காந்திஜி தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 625011.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ. சாந்தி 39, நேதாஜி 2வது குறுக்குத் தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 625011. 2) டி. ஜெயசுதா 72, என்.எஸ்.கே. நகர் 1வது தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 625011. 3) எம். கார்த்திகா 669, ராமமூர்த்தி நகர் 4வது தெரு, சோலையழகுபுரம், மதுரை - 625011. 4) வி. ராணி 14, ராஜபவன வீதி, சோலையழகுபுரம் 4வது தெரு, மதுரை - 625011. 5) என். ஸ்ரீவித்யா 17, 6/76, பார்வதியம்மாள் இல்லம், ஜெய்ஹிந்த்புரம், மதுரை - 625011.

**ஜீவா நகர் பகுதி**

அமைப்பாளர் - எஸ். குருலெட்சுமி புலிப்பாண்டியன் தெரு, ஜீவா நகர், மதுரை - 625011.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். தேன்மொழி ரோஜா தெரு, ஜீவா நகர், மதுரை - 625011. 2) எஸ். ஜோதிமணி கோவலன் நகர், ஜீவா நகர், மதுரை - 625011. 3) வி. மஞ்சுளா தேவி புலிப்பாண்டியன் தெரு, ஜீவா நகர், மதுரை - 625011. 4) எம். பரமேஸ்வரி ஜீவா நகர் 1வது தெரு, மதுரை - 625011. 5) எம். மாரிச்செல்வி ராமையா தெரு, ஜீவா நகர், மதுரை - 625011.

**பழங்காநத்தம் பகுதி**

அமைப்பாளர் - கே. ராஜேஸ்வரி முத்தாலம்மன் கோவில் தெரு, விராட்டிபத்து மதுரை - 625016.

துணை அமைப்பாளர்கள் - 1) பி. எலீஸ் (எ) லெட்சுமி 9, இருளப்பசாமி கோவில் தெரு, பழங்காநத்தம், மதுரை - 625003. 2) வி. மகேஸ்வரி 22/1, தண்டல்காரன்பட்டி 2வது குறுக்கு தெரு, பழங்காநத்தம், மதுரை - 625003. 3) ஆர். முத்துச்செல்வி 14/8பி, மருதுபாண்டியர் 2வது தெரு, பசும்பொன் நகர், பழங்காநத்தம், மதுரை - 625003. 4) ஜி. பாண்டியம்மாள் 26/46/2, தேனி மெயின் ரோடு, விராட்டிபத்து, மதுரை - 625016. 5) பி. மாரிஸ்வரி ஹரிஜன காலனி, விராட்டிபத்து, மதுரை - 625016.

**சம்மட்டிபுரம் பகுதி**

அமைப்பாளர் - ஏ. சரஸ்வதி 72, சொக்கலிங்கநகர் 6வது தெரு, மல்லிகை குடியிருப்பு, அரசரடி, மதுரை - 625016.

துணை அமைப்பாளர்கள் - 1) டபிள்யு. காணிக்கை ரோஸ்லின் 84, கோமஸ் வீதி, பாத்திமா நகர், மதுரை - 625016. 2) டி. மங்கையர்கரசி 138, சொக்கலிங்க நகர் 4வது தெரு, மதுரை - 625016. 3) முத்துபிரியா பகத்சிங் தெரு, மருது பாண்டியர் மெயின் வீதி, போடி, லைன் வடபுறம், மதுரை - 625016. 4) எம். சௌமியா 14/3/75, சேர்வைகார தெரு, பெருமாள்பட்டி, மதுரை. 5) எஸ். பானுமதி 134/சி, (2), ராஜ் நகர், அரசரடி, சம்மட்டிபுரம், மதுரை - 625016.

**பெத்தானியாபுரம் பகுதி**

அமைப்பாளர் - டி. ஜெயலட்சுமி முனியாண்டி கோவில் தெரு, மேட்டுத் தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625016.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. பிச்சைம்மாள் பிள்ளை கோவில் தெரு, மேட்டுத்தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625016. 2) எம். தவப்புதல்வி திலிபன் தெரு, பெத்தானியாபுரம், மதுரை - 625016. 3) எஸ். முத்துலட்சுமி 10, ராமசாமி முதலியார் தெரு, கோச்சடை, மதுரை - 625016. 4) ரம்யா 47/3, கரிசல்குளம் முதல் தெரு, மதுரை - 625018. 5) சி. பிரியங்கா 6/50, அண்ணா தெரு, வி. கரிசல்குளம், மதுரை - 625018.

**ஆரப்பாளையம் பகுதி**

அமைப்பாளர் - சி.எம். சுசிலா 74, சோனை கோயில் தோப்பு, ஆரப்பாளையம், மெயின் ரோடு, மதுரை - 625016.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. சத்தியா 57, மேலப் பொன்னகரம் 2வது தெரு, ஆரப்பாளையம், மதுரை - 625016. 2) எஸ். பொன்னம்மாள் 1/1, மேலப்பொன்னகரம் 10வது தெரு, ஆரப்பாளையம், மதுரை - 625016. 3) த. செல்வி 5, இந்திரா நகர் தெரு, கொன்னவான் சாலை, மதுரை - 625016. 4) எம். ராணி 25/1, மேலப்பொன்னகரம் 2வது தெரு, ஆரப்பாளையம், மதுரை - 625016. 5) எம். வனிதா 1/2 முனிசிப்பாளையம் ரோடு, ஆரப்பாளையம், மதுரை - 625016.

**சிம்மக்கல் பகுதி**

அமைப்பாளர் - ராஜேஸ்வரி 2/46, கனகவேல் காலனி, வேம்புலி காம்பவுண்ட், மதுரை - 625001.

துணை அமைப்பாளர்கள் - 1) அ. கவிதா 47/மேல மாசி வீதி, மதுரை மாவட்டம். 2) பிரியா (எ) செல்லமணி 14, தலைவிரிச்சான் சந்து, மதுரை மாவட்டம். 3) பூஜா 32, மணி நகரம் மெயின் ரோடு, மதுரை. 4) வாணி 30/7, காமாட்சிபுரம் அக்ரஹாரம், சிம்மக்கல், மதுரை - 625001. 5) ஞானசுந்தரி 2/32,ஜி- ஒர்க் ஷாப் ரோடு, திரு.வி.க. சாலை, மங்கையர்கரசி பள்ளி அருகில், மதுரை - 625001.

**மேலமாசிவீதி பகுதி**

அமைப்பாளர் - நா. பாக்கியலட்சுமி 45/1, பிளாக், பாஸ்கரதாஸ் நகர், திடீர் நகர், மதுரை - 625001.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர். கார்த்தீஸ்வரி 4707, தென்றல் நகர், மதுரை - 625011. 2) எஸ். ராஜலெட்சுமி 124, ஹரிசன் காலனி, சுப்பிரமணியபுரம், மதுரை - 625011. 3) டி. செல்வத்நிஷா தஸ்தகீர் 51, தோப்புகாலமொ, ஹீராநகர், அலவுதீன் தோப்பு, மதுரை - 625001. 4) சு. வசந்தா 12, வாணிகர் 2வது சந்து, நேதாஜி ரோடு, மதுரை - 625001. 5) வி. சந்தியாதேவி 12, பெரிய மறவர் தெரு, தெற்குமாசி வீதி, மதுரை - 1.

**எல்லீஸ் நகர் பகுதி**

அமைப்பாளர் - பி. பொன்மலர் 41/1, பொன்மாரி நகர், மதுரை - 625011.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். நதியா 74/33, மீனாட்சி மில் காலனி, வசந்த் நகர், மதுரை - 625003. 2) எம். ஆரோக்கிய செல்வி, 33/1, வைத்தியநாதபுரம் கிழக்கு சந்து, மதுரை - 625001. 3) ராணி சேது 38/8, முத்தவர் இல்லம் பின்புறம், முனியாண்டி கோவில் தெரு, வைத்திய நாதபுரம், மதுரை - 625016. 4) கி. செல்வி 12/7, நண்பர்கள் தெரு, எஸ்.எஸ். காலனி, மதுரை - 625016. 5) சி. வனிதா 130/எ, அன்சாரி நகர் முதல் தெரு, மகப்பூப்பாளையம், மதுரை - 625016.

**காமராஜர்புரம் பகுதி**

அமைப்பாளர் - ஏ. ராதா ஏ.ஏ. ரோடு, குருவிக்காரன் சாலை, மதுரை - 625009.

துணை அமைப்பாளர்கள் - 1) ஏ, தமிழ்செல்வி தாமரை நகர், பங்கஜம் காலனி, மதுரை - 625009. 2) எஸ். அம்பிகா 23/13, கவிமணி தெரு, நியூ பங்கஜம் காலனி, மதுரை - 625009. 3) உ. முத்தீஸ்வரி ஹாஜிரா தெரு, காமராஜர் சாலை, மதுரை - 625009. 4) எம். ஜெயலட்சுமி 1/இ, தமிமுன் தெரு, மதுரை - 625009. 5) செல்வி சக்தி விநாயகர் கோவில் தெரு, பங்கஜம் காலனி, மதுரை - 625009.

**நெல்பேட்டை பகுதி**

அமைப்பாளர் - மே. ஜான்சி நித்யா 1/ஏ, நடுத் தெரு, மதிச்சியம், மதுரை - 625020.

துணை அமைப்பாளர்கள் - 1) க. விஜயா 37/10, ஜலசார் மெயின் ரோடு, மதுரை - 625020. 2) ஏ. ஜானகி 27ஏ/119, சப்பாணி கோவில் தெரு, முனிசிபல் காலனி ரோடு, மதுரை - 625020. 3) ஆ. மலை ஈஸ்வரி, 4/12/பி.டி. காலனி, கரும்பாலை, மதுரை - 625020. 4) இ. சிவகாமி இ/259, இந்திரா நகர், மதுரை - 625020. 5) எம். வள்ளி மீனா பி.டி. காலனி, கரும்பாலை, மதுரை - 625020.

**தெற்குவாசல் பகுதி**

அமைப்பாளர் - ஏ. மகாலட்சுமி 21/ஏ, திரௌபதி அம்மன் கோவில் தெரு, பழைய மகாளிப்பட்டி ரோடு, தெற்குவெளி வீதி, மதுரை - 625001.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.கே. கங்கா 10, மகால் 5வது தெரு, மஞ்சணக்கார தெரு, மதுரை - 625001. 2) பி. கௌசல்யா 17/பி, தென்னோலைக்கார 2வது தெரு, தெற்கு வாசல், மதுரை - 625001. 3) ஜி. ஆவுடைநாயகி 29/26, தில்லை நாயகபுரம் சந்து, தெற்கு வெளி வீதி, மதுரை - 625001. 4) வி. விஜயராணி 26/1ஏ, முத்துகருப்பபிள்ளை சந்து, தெற்குவாசல், மதுரை - 625001. 5) பி. பிரியதர்ஷினி, 18, காசிராஜன் இல்லம், தில்லைநாயகபுரம் சந்து, தெற்கு வாசல், மதுரை - 625001.

**வில்லாபுரம் பகுதி**

அமைப்பாளர் - சி. மகாலட்சுமி 11, வடக்கு 4வது சந்து, கீரைத்துறை, மதுரை - 625001.

துணை அமைப்பாளர்கள் - 1) ஜி. முத்துமாரி 16/ஏ, மேல 4வது தெரு, வில்லாபுரம், மதுரை - 625012. 2) எம். தனலட்சுமி 89/3/35, மேலத்தோப்பு, கீரைத்துறை, மதுரை - 625001. 3) எஸ். விஜயலட்சுமி, முத்துராமலிங்க தேவர் தெரு, காமராஜபுரம், மதுரை - 625009. 4) எம். கற்பகவல்லி, 6/5, பகத்சிங் தெரு, காமராஜபுரம், மதுரை. 5) கே. ஜீவிதா 2/ஏ, தெய்வக்கன்னி தெரு, அனுப்பானடி, மதுரை - 625009.

**கே. புதூர் பகுதி**

அமைப்பாளர் - ச. அந்தோணியம்மாள் மண்மலை ரோடு, கோ. புதூர், மதுரை - 625007.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். கற்பகம் 23, மாரியம்மன் கோவில் தெரு, கோ. புதூர், மதுரை - 625007. 2) சாந்தி 5/பி, காலாங்கரை விசாலாட்சிபுரம், மதுரை - 625014. 3) மு. புவனேஸ்வரி 135, முனியாண்டி கோவில் தெரு, ஜவகர்புரம், கோ. புதூர், மதுரை - 625007. 4) கனிமொழி மணிமாறன் பிள்ளையார் கோவில் தெரு, காந்திபுரம் 3வது தெரு, கோ. புதூர், மதுரை - 625007. 5) எஸ். பிரேமலதா 69/1, பாரத் நகர் 4வது தெரு, எஸ். கொடிக்குளம், மதுரை - 625007.

**செல்லூர் பகுதி**

அமைப்பாளர் - எம். கார்த்திகா 14, சத்தியமூர்த்தி 2வது தெரு, செல்லூர், மீனாம்பாள்புரம், மதுரை - 625002.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. நாகஜோதி 43/3, சத்தியமூர்த்தி நகர் 6வது தெரு, முனியாண்டி கோவில் தெரு, செல்லூர், மீனாம்பாள்புரம், மதுரை - 625002. 2) எஸ். ராமலட்சுமி 86/ஏ, நேதாஜி பிரதான சாலை, பி.பி.குளம், மதுரை - 625002. 3) எஸ். லதாமங்கேஷ் 113, வள்ளுவர் காலனி ஆனையூர், மதுரை - 625017. 4) ஆர். பாண்டியம்மாள் 94, நாராயண குரு 1வது தெரு, பாக்கியநாதபுரம், மதுரை - 625002. 5) எஸ். மாலதி 9/சி, தபால் தந்தி நகர் 2வது தெரு, கோசாகுளம், ஆனையூர், மதுரை - 17.

**கோரிபாளையம் பகுதி**

அமைப்பாளர் - பா. போதும் பொண்ணு 45, ஜீவா ரோடு, கட்ட பொம்மன் நகர், செல்லூர், மதுரை - 625002.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். முத்துமாரி 387, எஸ்.எம். நகர், கரும்பாலை, மதுரை - 625020. 2) எம். வேணி சுல்தான் நகர் குறுக்கு தெரு, மருதுபாண்டியர் நகர், மதுரை - 625002. 3) தையுபா 2, பள்ளிவாசல் தெரு, கோரிப்பாளையம், மதுரை - 625002. 4) ராஜாத்தி 2/4, சங்கரம்மாள் காம்பவுண்ட், சுயராஜ்ஜியபுரம் 1வது தெரு, செல்லூர், மதுரை - 625002. 5) சித்திரைசெல்வி 10, பந்தல்குடி மெயின் செல்லூர் மதுரை - 625002.

**கே.கே.நகர் பகுதி**

அமைப்பாளர் - கே. சரஸ்வதி 4, அப்பளக்கார தெரு, நரிமேடு, மதுரை - 625002.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. வசந்தி 150. செல்லத்தம்மன் கோவில் தெரு, மானகிரி, மதுரை. 2) கே. பாண்டியம்மாள் எஸ்.எம்.டி. காலனி 2வது தெரு, அண்ணா நகர், மதுரை. 3) எஸ். கற்பகம் 2/21, நாகா வீதி, மேலமடை, மதுரை - 625020. 4) டி. செல்வி 4/89, எழில் நகர், மேலமடை, மதுரை- 625020. 5) கிறிஸ்டி செல்வி ஏ9/5, சட்ட கல்லூரி ரோடு, ஹவுசிங் போர்டு காலனி, கே.கே. நகர், மதுரை.

**அண்ணா நகர் பகுதி**

அமைப்பாளர் - ஜி. ஜெயராணி 5/842, வ.உ.சி. 3வது தெரு குறுக்கு தெரு, யாகப்பா நகர், மதுரை - 625020.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மகேஸ்வரி 5/970, வைகை வீதி, யாகப்பா நகர், மதுரை - 625020. 2) வி. ராணி 5/1979, குறிஞ்சி நகர் 5வது வீதி, சௌராஷ்டிராபுரம், மதுரை - 625020. 3) எஸ். ஜனனி 1/44, நடுத் தெரு, மேலமடை, மதுரை. 4) எம். ரெஜித்ரா 4/1631, தாசில்தார் நகர், வண்டியூர் மெயின் ரோடு, மதுரை. 5) ஆர். ரீட்டா 5/1128, பாண்டியன் தெரு, யாகப்பா நகர், மேலமடை, மதுரை - 625020.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 11.11.2024

**ஜெ.ஹெலன் டேவிட்சன்.**
செயலாளர்
தி.மு.க. மகளிர் அணி

---

கோவை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.13 கோடியில் 2-வது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

கோவை, நவ.14-

கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று முன்தினம் (12.11.2024) ரூ.13 கோடி மதிப்பில் 2வது எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி.மீனாலோகு, மாமன்ற உறுப்பினர் திருமதி.சுமா, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.நிர்மலா, இ.எஸ்.ஐ மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரவீந்திரன், மருத்துவ கண்காணிப்பாளர் கண்ணதாசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி கோயம்புத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் தொடங்கி வைக்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியின் கீழ் (JICA) ரூ.13 கோடி மதிப்பீட்டில் புதிய 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி கோயம்புத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டது.

தற்போது உள்ள எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவி 2018-இல் நிறுவப்பட்டது. எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவிக்கு அதிக அளவிலான நோயாளிகள் தினந்தோறும் வருகின்ற காரணத்தாலும், கூடுதலான தொழில்நுட்பம் வாய்ந்த கருவிவேண்டுமென்ற காரணத்தாலும், இப்புதிய எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. புற நோயாளிகளுக்கு எம்.ஆர். ஐஸ்கேன் செய்வதற்கு தற்போதைய காத்திருப்பு காலம் சுமார் 2 முதல் 3 நாட்கள் ஆகிறது.

மேலும், ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேன் பரிசோதனைக்கு 40 நிமிடங்கள் ஆகும். ஒரு நாளைக்கு 30 முதல் 32 ஸ்கேன் மட்டுமே எடுக்க முடியும். ஆனால் தற்போது தொடங்கி வைக்கப்பட்டுள்ள கருவியில் ஒரு ஸ்கேன் பரிசோதனைக்கு 20 நிமிடத்திற்குள்ளாகவே ஒரு எம்.ஆர்.ஐ ஸ்கேன் செய்துகொள்ளமுடியும். இதன்மூலம் அதிக எண்ணிக்கையில் ஸ்கேன் பரிசோதனை செய்யமுடியும் என்பதால் காத்திருப்பு காலம் குறையும். நரம்பியல், இதயநோய் மற்றும் புற்றுநோயியல் சோதனைகளில் பாதிப்புகளை கண்டறிய புதிய 1.5 டெஸ்லா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி மிக உதவியாக இருக்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த மூன்றரை ஆண்டுகளில் மிகப்பெரிய வளர்ச்சியை தொடர்ந்து தந்துகொண்டு இருக்கிறார். கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரியில் இளங்கலை மருத்துவ படிப்பு இடங்களை 150லிருந்து 200 ஆக உயர்த்தப்பட்டு, ரூ.85.55 கோடி செலவில் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டது.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட சீமாங் மையம், ஜப்பான் பன்னாட்டு நிதி ஆதாரத்தின் கீழ் ரூ.285.96 கோடி மதிப்பீட்டில் புதிய பன்னடுக்கு உயர் சிறப்பு மருத்துவ கட்டிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது.

இக்கட்டடத்தின் 6 வது தளத்தில் ஆப்ரேஷன் அரங்கம் முடிவுறும் தருவாயில் இருக்கிறது. விரைவில் இத்தளம் பயன்பாட்டுக்கு வர இருக்கின்றது. இந்த புதிய மருத்துவமனை கட்டடம் பயன்பாட்டில் உள்ளதால் புறநோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. 2021 தொடக்கத்தில் தினந்தோறும் வரும் புறநோயாளிகளின் எண்ணிக்கை 3000 இருந்தது. தற்போது 4500 ஆக உயர்ந்து இருக்கிறது. இம்மருத்துவமனையில் மருத்துவ சேவை பெறும் மக்களின் எண்ணிக்கை உயர்ந்து இருக்கிறது.

ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் பச்சிளம் குழந்தை தீவிரசிகிச்சைப் பிரிவு, ரூ.92.48 இலட்சம் மதிப்பீட்டில் தீவிர சிகிச்சைப் பிரிவில் நவீன மருத்துவ உபகரணங்களுடன் கூடிய ஆக்சிஜன் படுக்கைகள் கொண்ட செவிலியர் கண்காணிப்பு மையமும் மற்றும் பன்முக உயர்தர தீவிர சிகிச்சைப் பிரிவு, ரூ.10இலட்சம் மதிப்பீட்டில் புதிப்பிக்கப்பட்ட Toxicology ICU, ரூ.45இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப் பட்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் 3 KL திரவ மருத்துவ ஆக்சிஜன் டேங்க், ரூ.57.90 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட தீவிரஅறுவை சிகிச்சைப் பிரிவு, ரூ.25இலட்சம் மதிப்பீட்டில் தொலைமருத்துவம் (Tele PICU), ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் குழந்தை கள் சிகிச்சைப் பிரிவுக்கு அதிநவீன சிகிச்சை உபகரணங்கள், ரூ.1.18கோடி மதிப்பீட்டில் கட்டண வார்டு, ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தகவல் மையம், ரூ.15.46 இலட்சம் மதிப்பீட்டில் எலிபசை, விஷமுறிவு, பிளாஸ்மா குருதி மற்றும் சிகிச்சைக் கான மாநில பயிற்சி மையம், ரூ.12 கோடி - PET CT, ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் அதிநவீன இரத்தஉள்நோக்கு கருவி அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆட்சி அமைவதற்கு முன், சென்னை மற்றும் மதுரையில் மட்டும்தான் புற்றுநோயை துல்லியமாக கண்டறியும் PET CT கருவி இருந்தது. தற்போது கோயம் புத்தூர், சேலம், தஞ்சாவூர், காஞ்சிபுரம், நெல்லை ஆகிய 5 இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இம்மருத்துமனையில் பாதாளசாக்கடை, சாலை சீரமைப்பு பணியும் செய்ய கோரிக்கை வைக்கப்பட்டது. உடனடியாக ஏற்றுக்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விரைந்து செயல்படுத்துவோம் என்று அறிவுறுத்தினார்கள்.

அதன்படி இம்மருத்துமனையில் பாதாளசாக்கடை, சாலை சீரமைப்பு பணிக்கு ரூ.9கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மிக விரைவில் இப்பணிகள் தொடங்கப்படவுள்ளது. அதுமட்டுமல்லாமல் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் நீராவி சலவை வசதிகள் அமைக்கும் பணியும், சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.65 கோடி மதிப்பீட்டில் பழைய மருத்துவமனைக்கு மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள இந்த மருத்துவமனை இரண்டையும் இணைக்கும் வகையில் இணைப்பு பகுதி கட்டும் பணியும் நடைபெறவுள்ளது. இதுபோன்று பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகள் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன் நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் திறந்து வைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதில் கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 72 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் அறிவிக்கப்பட்டன. இதில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 06.06.2023 அன்று சென்னையிலிருந்து 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை திறந்து வைத்தார்.

அதில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் 45 இடங்களிலும், மேட்டுப்பாளையம் நகராட்சி - 1, பொள்ளாச்சி நகராட்சி - 2, வால்பாறை நகராட்சி - 1 ஆகிய 49 இடங்களில் திறந்து வைத்தார்கள். ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையங்களிலும், ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என நான்கு பணியிடங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான மாவட்ட ஹெல்த் சொசைட்டியின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர். நகர்ப்புற நல வாழ்வு மையங்களை காலை 8 மணிக்கு திறக்கப்பட்டு, 12 மணிவரையிலும், பிற்பகல் 4 மணி முதல் 8 மணி வரையிலும் செயல்படவேண்டும். நான் போகின்ற இடங்களில் எல்லாம் இந்த நலவாழ்வு மையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வருகிறேன்.

அதன்படி, நேற்று முன்தினம் மாலை, கோயம்புத்தூர் மாநகர பகுதிகளில் உள்ள 4 நகர்ப்புற நலவாழ்வு மையங்களில் ஆய்வு செய்யப்பட்டது. மக்கள் நெருக்கடி மிகுந்த பகுதிகளில் காலை மாலை வேளைகளில் மக்கள் மருத்துவ சேவை பெறும் வகையில்தான் இவை திறந்து வைக்கப்பட்டுள்ளன. எனவே, காலை, மாலை இரண்டு நேரங்களில் மருத்துவமனைகள் இயங்குகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும் என தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாலையில் மருத்துவமனை திறக்கப் படாமல் இருந்தாலும், தகவல் தெரிவிக்காமல் பணிக்கு வராமல் இருபவர்களையும் உடனடியாக பணியிலிருந்து விடுவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் செயல்படும் பார்வை நேரம் குறித்த விளம்பர பெயர்பலகைகள் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.'

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

---

சிங்கம்புணரி ஒன்றியத்தில்

# 741 மாணவர்களுக்கு ரூ.36 லட்சத்தில் மிதிவண்டிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்! குன்றக்குடி அடிகளார் பங்கேற்பு!

சிவகங்கை, நவ.14 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி சிங்கம்புணரி ஒன்றியத்தில் முதல்வரின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது. ஏரியூர், எஸ். மாம்பட்டி, எஸ்.எஸ். கோட்டை, முறையூர், பிரான்மலை, கிருங்கா கோட்டை, சிங்கம்புணரி ஆகிய ஊர்களில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 741 மாணவ - மாணவிகளுக்கு ரூபாய் 35 லட்சத்து 70 ஆயிரத்து மதிப்பிலான முதல்வரின் விலையில்லா மிதி வண்டிகளை கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

முன்னதாக எஸ்.மாம்பட்டி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரூபாய் 7 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பயணிகள் நிழற்குடையை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், திட்ட இயக்குனர் சிவராமன், ஊராட்சிகள் உதவி இயக்குனர் கேசவதாசன், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செந்தில்குமார், வட்டாட்சியர் பரிமளா, ஒன்றிய செயலாளர்கள் கே. பாலசுப்பிர மணியன், பூமணி, சிங்கம்புணரி பேரூராட்சி மன்றத் தலைவர் அம்பலமமுத்து துணை தலைவர் செந்தில், பேரூர் கழகச் செயலாளர் கதிர்வேல், முன்னாள் ஒன்றிய செயலாளர் ஏ.எல்.சந்திரன், சிவபுரி சேகர், மனோகரன் ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், புகழேந்தி, பில்லப்பன் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவ - மாணவிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.



தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வாளரும், முற்போக்கு எழுத்தாளருமான பேராசிரியர் ராஜ் கௌதமன் அவர்கள் மறைவெய்தியதையொட்டி அவரது உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப், துணை மேயர் கே. ஆர். ராஜ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.